


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை நேற்று (20.12.2025) திறந்து வைத்தார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், த.மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட தொல்லியல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தினை நேற்று (20.12.2025) திறந்து வைத்து பார்வையிட்டார்.

### 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயலையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# டிச.24 மேடவாக்கத்தில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!'

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்! சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

**சென்னை, டிச. 21-**

**100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் - சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் டிச.24- புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் சென்னை மேடவாக்கத்தில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இந்த ஆர்ப்பாட்டம் குறித்து சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலைநாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, 'கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு' என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது என சட்டத்தை திருத்தியும் – நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச் செயலையும் - அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.கவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் **'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் 24.12.2025 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலை வாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும் என தலைவர், முதல்வர் அவர்களின் அறிவுத்தலின்படி தலைமைக் கழகத்தில் அறிவிப்பட்டுள்ளது.

சென்னை மேடவாக்கத்தில் டிச.24ல் நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, காங்கிரஸ் சார்பில் கே.வி.தங்கபாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் கே.பாலகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய யூனியன் முஸ்லீம்லீக் தேசிய செயலாளர் கே.எம்.காதர் மொய்தீன், கொங்குநாடு மக்கள் கட்சித் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - மாநில நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், செயல்வீரர்கள் திரளாகப் பங்கேற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.12.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற மக்களவை கழகக்குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் சந்தித்து, புது தில்லியில் நடைபெற்ற லோக்மத் நாடாளுமன்ற விருதுகள் 2025 வழங்கும் விழாவில், நாடாளுமன்றத்தில் சிறந்த முறையில் செயலாற்றி வருவதற்காக தனக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

### விடுபட்ட வாக்காளர்களைச் சேர்க்கும் வகையில்

# எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும்!

## "தி இந்து ஆங்கில நாளேடு" தலையங்கம்!

சென்னை, டிச.21-

நாடு முழுவதும் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தத்தில் பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, "தி இந்து ஆங்கில நாளேடு" தலையங்கம் தீட்டியுள்ளது.



THE HINDU

**Do not rush it**

The SIR requires more time to prevent mass exclusions

The Election Commission of India (ECI) has released the draft electoral roll for seven States and Union Territories after the first phase of the Special Intensive Revision (SIR) was completed with the submission of enumeration forms by eligible voters and their digitisation by Booth Level Officers (BLO). In Tamil Nadu and West Bengal, more than 97 lakh and 58 lakh voters, respectively, were deleted. These deletions

தமிழ்நாட்டில் எஸ்.ஐ. ஆர்., பணிகள் முடிவடைந்த நிலையில், மாநிலம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில், 97 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப் பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேபோன்று, மேற்குவங்கம், கேரளா உள்ளிட்ட 7 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பல கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தத்தில் பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது. தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில்தான் அதிக அளவிலான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, மேற்குவங்கத்தில் 7 புள்ளி 50 சதவீத வாக்காளர்களும், தமிழ்நாட்டில் 15 சதவீதத்தினரும் நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்கத்தை பொறுத்தவரை நகர்ப்புறங்களில் அதிகளவிலான வாக்காளர்கள் நீக்கப் பட்டுள்ளதாகவும், குறிப்பாக, கொல்கத்தாவில் அதிக அளவிலான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள் ளதும் தெரியவந்துள்ளது. இதேபோன்று, மேற்கு வங்கத்தில் அதிக எண்ணிக்கையிலான கணக்கெடுப்புப் படிவங்கள் 2002 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுடன் இணைக்கப்படாமல் உள்ளதாகவும்,1987ம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்களுக்கு பெற்றோரின் பிறப்பு விவரங்களுக்கான சான்றுகள், குடியுரிமை ஆவணங்களை தேர்தல் அதிகாரிகள் வலியுறுத்துவதால் எஸ்.ஐ. ஆர். பணிகளை மேற்கொள்வதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுவதாகவும் 'தி இந்து' ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

மேற்குவங்கத்தில் குடியுரிமை ஆவணங்களை தேர்தல் பதிவு அதிகாரிகள் வலியுறுத்துவதால், 53 நாட்கள் கொண்ட குறுகிய கால அவகாசத்தில் வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பீகாரில், வாக்காளர்கள் ஆதார் அட்டையை ஒரு செல்லுபடியாகும் அடையாள ஆவணமாகப் பயன்படுத்த அனுமதிக்கலாம் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்களை நீக்குவதை தடுக்க உதவிய நிலையிலும் 68 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட தாகவும் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம், பீகாரில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர்கள் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சரியாக இல்லை என்பதையே காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்தோர், எழுத்தறிவற்ற வாக்காளர்கள் மற்றும் திருமணமான பெண்கள் போன்றோர் எஸ்.ஐ.ஆர். பணி களின் மூலம் தங்களின் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் அபாயத்தில் உள்ளனர். கேரளாவில் எஸ்.ஐ.ஆர். பணிகள் நடைபெற்ற போது, உள்ளாட்சித்தேர்தல் பணிகளும் ஒரேநேரத்தில் நடைபெற்றதால் குறுகிய காலத்தில் வாக்காளர்கள் தங்களின் வாக்குரிமையை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே, பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலை யில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.



சென்னைப் பெரியார்திடல் மணியம்மையார் அரங்கில் கவிஞர் கடவூர் மணிமாறன் எழுதிய தெற்கே முழங்கும் திராவிடம் என்னும் கவிதைத் தொகுப்பினை, பேராசிரியர் மா.செல்வராசன் தலைமையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிட, பேராசிரியர் பொன் செல்வகணபதி பெற்றுக் கொண்டார். அருகில் கடவூர் மணிமாறன், முனைவர் விபொபா தமிழ்ப்பாவை, அறிவுக் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் BLA2, BDA, BLC மற்றும் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*திருவள்ளூர், டிச. 21*

*திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்களர் பட்டியலை ஒன்றிய,நகர, பேரூர் வாரியாக பிரித்து வழங்க உள்ளோம். வரைவு வாக்காளர் பட்டியலை பெற்றுக் கொண்ட ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக பாகம் வாரியாக பிரித்து வார்டு, கிளைச் செயலாளர்கள் மூலம் அந்தந்த பாக BLA2 வசம் உடனே ஒப்படைத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*



*பூத் வாரியாக பிரித்துத் தரப்படும் வரைவு வாக்காளர் பட்டியலுடன், இறந்த, இடம் மாறிய, கண்டுபிடிக்க முடியாத வாக்களர்களின் விவரங்கள் அடங்கிய ASD பட்டியலையும் சேர்த்து எடுத்துக்கொண்டு, அந்த பூத் BLA2, BDA, BLC மற்றும் கழகத்தினருடன் வீடு வீடாகச் சென்று வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்த்திடும் இன்றியமையாப் பணியில் உடனே ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். சரிபார்த்து வரைவு வாக்காளர் பட்டியலில் விடுப்பட்ட வாக்காளர்களையும், 18வயது நிரம்பிய புதிய வாக்காளர் பெயர்களையும், புதிதாக இடம் பெயர்ந்துள்ள வாக்களர்களின் பெயர்களையும் படிவம் 6ல் சேர்த்திடும் முக்கியப் பணியில் கழகத்தினர் அனைவரும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பூத் வாரியாக ASD பட்டியலை சரிபார்க்கும் போது உண்மையாக உள்ள வாக்காளர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டிருந்தால் அவர்களது பெயர் மீண்டும் அந்த பூத் வாக்காளர் பட்டியலில் சேர்த்திட படிவம் 6ல் பூர்த்தி செய்து தருவதற்கு உரிய உதவிகளை செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வரைவு வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் போது இறந்தவர்கள் இடம் மாறியவர்கள் பெயர்கள் மீண்டும் இடம் பெற்றிருந்தால், அந்தந்த பூத் BLA2 படிவம்7ல் பூர்த்தி செய்து அவர்களை நீக்கம் செய்திடும் பணியில் ஈடுபட வேண்டும். மேலும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களில் 2002/2005 S.I.R. சரிபார்ப்பில் பொருத்தம் ஆகாதவர்களுக்கு அந்தந்த தொகுதி தேர்தல் அலுவலர்கள், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள 12 ஆவணங்களில் ஏதாவது ஒரு ஆவணத்தை வழங்கிட வேண்டும் என்று BLO மூலம் நோட்டீஸ் வழங்கினால் அந்தந்த BLA2 அது சம்பந்தமாக அந்த வாக்காளர்களிடம் இருந்து ஆவணங்களை பெற்று BLO வசம் ஒப்படைத்திடும் பணியில் ஈடுபட்டு அவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன் எனவே அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டுகிளைக் கழச் செயலாளர்கள், BLA2,BLC,BDA, இளைஞரணி, வழக்கறிஞரணி, தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் சார்பில் அனைவரும் ஒன்றிணைந்து, இந்த இன்றியமையாத பணியை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இந்த வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி முக்கியமானது எனவே கழகத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து கவனத்தில் கொண்டு இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை வாயிலாக தெரிவித்து கொண்டார்*



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நாட்டரசன்பட்டு ஊராட்சி பாகம் எண்307ல் பாக உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் உரையாற்றினார்.